www.Padasalai.Net Kanchipuram Dt www.TrbTnpsc.com

# முதல் திருப்புதல் தேர்வு – 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள்:90

### பகுதி – அ

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20

1. பொது மட்டத்தில் விலையின் தொடர் உயர்வைக் குறிப்பிடும் கருத்து ______ ஆகும்.
   அ) மொத்த விலைக் குறியீடு ஆ) வணிகச் சுழல் இ) பணவீக்கம் ஈ) நாட்டு வருமானம்
2. பொருளாதாரக் கொள்கைகளின்அவசியத்தைக் குறிப்பிடுக.
   அ) அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது ஆ) தடைகளை முறியடிப்பது
   இ) வளர்ச்சியை அடைவது ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்
3. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?
   அ) செலவிடக்கூடிய வருமானம் ஆ) தனிமனிதர் வருமானம் இ) NNP ஈ) GNP
4. ஒரு நாட்டின் ______ செயலை நாட்டு வருமானம் குறிப்பிடுகிறது.
   அ) தொழில் ஆ) விவசாயம் இ) பொருளாதாரம் ஈ) நுகர்வு
5. J.B. சே. ஒரு ______
   அ) புதிய – தொன்மைப் பொருளியலாளர் ஆ) தொன்மைப் பொருளியலாளர்
   இ) புதிய யுகப் பொருளியலாளர் ஈ) புதியப் பொருளியலாளர்
6. ______ சமநிலையை கீன்சுடைய கோட்பாடு வலியுறுத்தியது.
   அ) மிகக் குறுகிய காலச் ஆ) குறுகிய காலச் இ) மிக நீண்ட காலச் ஈ) நீண்ட கால
7. குறைவான வட்டி வீதம்
   அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்
   இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்
8. பெருக்கியின் மதிப்பு =
   அ) 1/(1-MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) அ மற்றும் ஆ
9. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ______ அழைக்கின்றோம்.
   அ) பூரிப்பு ஆ) பின்னிறக்கம் இ) மீட்சி ஈ) வணிகச்சுழற்சி
10. "பரிமாற்றங்களில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக் கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்" என்ற இலக்கணத்தை வழங்கியவர்
    அ) கிரௌதர் ஆ) பிகு இ) வாக்கர் ஈ) பிரான்சிஸ்டி பேக்கான்
11. கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது
    அ) மைய வங்கி ஆ) வணிக வங்கிகள் இ) நில வள வங்கிகள் ஈ) கூட்டுறவு வங்கிகள்
12. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    அ) இ–வங்கி ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட்
13. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ______
    அ) வெளி வாணிகம் ஆ) உள் வாணிகம்
    இ) மண்டலங்களுக்கிடையான வாணிகம் ஈ) உள்நாட்டு வாணிகம்
14. கீழ்க்காண்பவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிக வீதத்தை வடிவமைத்தவர்
    அ) ஜேக்கப் வைனர் ஆ) G.S. டோரன்ஸ் இ) எப். டபிஷ்யூ டாசிக் ஈ) ஜே.எஸ்.மில்
15. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக இரகசியம் முதலானவை ______ உடன் தொடர்புடையவை
    அ) வணிகம் சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
    இ) காட்ஸ் ஈ) NAMA
16. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு
    அ) சீனா ஆ) ஜப்பான் இ) இந்தியா ஈ) வடகொரியா
17. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி.
    1) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது
    2) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்
    அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் இ) இரண்டும் ஈ) இரண்டும் இல்லை
18. உலக வெப்பமயமாதல் ______ என்றும் குறிப்பிடப்படுகிறது.
    அ) சூழலியல் மாறுபாடு ஆ) பருவநிலை மாறுபாடு
    இ) வளிமண்டல மாறுபாடு ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



19. "அடிமைத்தனத்திற்கான பாதை" எனும் புத்தகத்தை எழுதியவர் யார்?
அ) பிரடெரிக் ஹேயக் ஆ) ஜெ.ஆர். ஹிக்ஸ் இ) டேவிட் ரிக்கார்டோ ஈ) டி.ஆர். மால்தஸ்
20. புள்ளியியல் எண் விவரங்களைப் பற்றிப் படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார்?
அ) ஹோராஸ் செக்ரிஸ்ட் ஆ) ஆர்.ஏ. ஃபிஷர் இ) யா–லன்–சூ ஈ) போடிங்ட்டன்

## பகுதி – ஆ

7x2=14

**II எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும். வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21. முதலாளித்துவம் என்றால் என்ன?
22. நாட்டு வருமானம் கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தருகிறது?
23. 'விளைவுத் தேவை' என்றால் என்ன?
24. தேக்க வீக்கம் என்றால் என்ன?
25. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறுக.
26. வணிக வீதத்தினை விளக்குக.
27. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.
28. "வரி", "கட்டணம்" வேறுபடுத்து.
29. உலக வெப்பமயமாதல் – வரையறு.
30. பொருளாதாரத்திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.

## பகுதி – இ

**III எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளிக்கவும். வினா எண் 40–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7x3=21

31. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
32. நாட்டு வருமானம் கணக்கிடுதலில் இருமுறை கணக்கீட்டுச் சிக்கலுக்கு என்ன தீர்வு?
33. கீன்சின் கோட்பாட்டை விளக்குக.
34. தன்னிச்சையான முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
35. தேவை – இழுப்புப் பணவீக்கம் செலவு உந்து பணவீக்கம் ஆகியவற்றை விளக்குக.
36. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.
37. இறக்குமதி கட்டுப்பாடு என்றால் என்ன?
38. பிரிக்ஸ் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.
39. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.
40. பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினைக் காண்க:
14, 22, 9, 15, 20, 17, 12, 11

## பகுதி – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.** 7x5=35

41. அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. *(அல்லது)*
ஆ) நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள் யாவை?
42. அ) ADF, ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி. *(அல்லது)*
ஆ) முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.
43. அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க. *(அல்லது)*
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.
44. அ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும். *(அல்லது)*
ஆ) குறிப்பு எழுதுக. அ) சார்க் ஆ) ப்ரிக்ஸ்
45. அ) நிதிக் கொள்கையின் கருவிகள் எவை? விளக்குக. *(அல்லது)*
ஆ) நீடித்த (அல்லது) வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.
46. அ) பொருளாதார முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும். *(அல்லது)*
ஆ) புள்ளியியலின் இயல்பு, எல்லைகளை விளக்குக.
47. அ) உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க. *(அல்லது)*
ஆ) வணிக வங்கிகளின் பணிகளை விவரிக்க.

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com